## காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி – சூளைமேடு அஞ்சுகம் தொடக்கப் பள்ளியில்

# ரூ.13.94 கோடியில் பள்ளி கூடுதல் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜீன் 28

**காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மற்றும் சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளியில் ரூ.13.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி கூடுதல் கட்டடங்களை திறந்து வைத்து, அப்பள்ளிகளின் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை, கல்வி உபகரணங்கள் மற்றும் மிதிவண்டிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2025) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 11.15 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடம், சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளியில்

2.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும் கூடம், கலையரங்கம், கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடத்தை மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பள்ளி மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.10,000/, கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகள் மற்றும் மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கத்தோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருக்கோயில்கள் சார்பில் கல்வி நிறுவனங்கள், பயிற்சி பள்ளிகள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடங்கள், மனநலக் காப்பகம், மருத்துவ மையங்கள் போன்றவை நடத்தப்பட்டு வருகின்றன. திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகள் மற்றும் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகளில் 22,455 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் இப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு 138.13 கோடி ரூபாய் செலவில்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.06.2025) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளியில் 2.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும் கூடம், கலையரங்கம், மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடத்தை மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீஎம்பார் ஜீயர் மடம் ஸ்ரீ அப்பன் உலகாரிய இராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் நா. எழிலன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள், கலையரங்கம், விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன.

சென்னை, கீழ்ப்பாக்கத்தில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் மெட்ரிக்குலேஷன் பள்ளியானது பொருளாதார நெருக்கடியால் திருக்கோயி லுக்கு செலுத்த வேண்டிய வாடகையை நீண்ட காலமாக செலுத்த முடியாத சூழலில் பள்ளியை திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு

அப்பள்ளியை திருக்கோயில் நிர்வாகமே ஏற்று நடத்திட உத்தரவிட்டதை தொடர்ந்து, 2021ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கு ஏற்கனவே 1.66 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இப்பள்ளியில் 981 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கு 11.15 கோடி ரூபாய் செலவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களில் முதல்வரின் கல்விச் சோலை வகுப்பறைகள் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் வசதிகளுடன் கூடிய 32 வகுப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், கணினி அறை, ஆய்வுக் கூடங்கள், நூலகம், மின் தூக்கி மற்றும் அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

சூளைமேடு, அஞ்சுகம் தொடக்கப்பள்ளிக்கு 2.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும் கூடம், கலையரங்கம், கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடம்;

என மொத்தம் 13 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலான கூடுதல் பள்ளிக் கட்டடங்களை மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல்வரின் கல்விச் சோலை வகுப்பறைகள் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் வசதிகளுடன் கூடிய 32 வகுப்பறைகள், கணினி அறை மற்றும் ஆய்வகங்களை நேரில் பார்வையிட்டார். மேலும், முதலாம் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரையிலான வகுப்பறைகளுக்கு சென்று பாடம் கற்பிப்பதை பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களிடம் கலந்தரையாடினார். அத்துடன் ஆய்வகங்களில் மாணவ, மாணவியர்கள் மேற்கொண்ட செய்முறை ஆய்வுகளையும் பார்வையிட்டார்.

மேலும், இப்பள்ளியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் 252 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.10 ஆயிரம், ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மற்றும் சூளைமேடு அஞ்சுகம் தொடக்கப் பள்ளியில் பயிலும் 1,131 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகள் மற்றும் ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் 166 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கிடும் அடையாளமாக 10 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, 10 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப்பைகள் மற்றும் 40 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி களையும் வழங்கினார். முன்னதாக மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீஎம்பார் ஜீயர் மடம் ஸ்ரீ அப்பன் உலகாரிய இராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் நா. எழிலன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எம்.வி.எம்.வேல் மோகன், கல்விக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை

## தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

### மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் ப. இராணி அறிக்கை!

*சென்னை, ஜூன் 28-*

*மாநில தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*நில தி.மு.க.மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு செயலாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் சகோதரி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா. இராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் 30.06.2025 திங்கள் கிழமை அன்று 12 மணிக்கு கலைஞர் அரங்கம், அண்ணா அறிவாலயம், சென்னையில் நடைபெறும். மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம்*

*பொருள்: 1.கழக ஆக்க பணிகள், 2."ஓரணியில் தமிழ்நாடு " புதிய கழக உறுப்பினர்கள் சேர்த்தல்*

*இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

---

### உலக அளவில் திரைத்துறையின் உச்சபட்ச விருதான

## ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய கலைஞானி கமல்ஹாசனுக்கு அழைப்பு!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

*சென்னை,ஜூன்.28-*

*உலக அளவில் திரைத்துறையில் உச்சபட்ச விருதான ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் கலைஞானி கமல்ஹாசனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:*

**உலக அளவில் திரைத்துறையின் உச்சபட்ச விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் அன்பு நண்பர் – கலைஞானி திரு. கமல்ஹாசன் அவர்களுக்கு என் வாழ்த்துகள்!**

**மொழி – தேச எல்லைகளைக் கடந்து திரைத்துறையினர் மீது தாங்கள் செலுத்திய பெரும் தாக்கத்துக்கான தாமதமான**



**அங்கீகாரமே இது. இன்னும் பல தேடி வரும் உயரம் தங்களுடையது!**

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

---

## கழக பொதுக்குழுவின் தீர்மானத்தின்படி ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் கழகத்திற்கு பாகம் வாரியாக உறுப்பினர் தேர்த்தல் பணி!



### மாவட்ட செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாகங்களுக்கு நியமிக்கப்பட்ட BLDA களுக்கு உறுப்பினர் சேர்த்தலுக்கான பயிற்சிக் கூட்டம் 30.06.2025 அன்று கீழ்கண்ட அட்டவணையின் படி நடைபெறவுள்ளது.

| வ.எண் | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 | ஆவடி தொகுதி | ஈஸ்வரி திருமணம் மண்டபம் சோழம்மேடு |
| 2 | மாலை 6.00 | பூவிருந்தவல்லி தொகுதி | சடையப்பா திருமண மண்டபம், பூவிருந்தவல்லி |

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் மா. ராஜி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அதுசமயம் தொகுதி பார்வையாளர்களான ஆவடி தொகுதிக்கு, மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் செல்வி நிவேதா ஜெசிகா, பூவிருந்தவல்லி தொகுதிக்கு மாநில தொழிலாளர் அணி செயலாளர் PTC செல்வராஜ், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் தொகுதி வாரியாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.